நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

### இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

# சங்கீத பூஷணம் திலகநாயகம் போல்

## ஆழத்து முத்துக்கள் 16

**- கே.எஸ். பாலச்சந்திரன் -**

அண்மையில் எங்கள் மண்ணின் முத்து ஒன்று கைதவறிப்போய்விட்டது. நீண்டநாட்களாக இவரைப்பற்றி எழுதவேண்டுமென்று நினைத்-



திருந்தேன். சந்தர்ப்பம் கைகூடி வரவில்லை. அவர் மறைவுக்குப்பின்தான் எழுதும் வாய்ப்பு வந்திருக்கிறது. என் இளமைக்காலத்திலே நான் விரும்பிக்கேட்கும் மெல்லிசைப்பாடல்களை பாடியவர்கள் மூவருமே கர்நாடக இசை வித்துவான்களாக புகழ்பெற்று விளங்கியவர்கள். சங்கீத பூஷணங்களான திலகநாயகம்போல், எம்.ஏ.குலசீலநாதன், எஸ்.பத்மலிங்கம் ஆகியோரே அம்மூவருமாவார்கள். மூவரினதும் குரல்கள் தனித்துவமானவை. கர்நாடக இசையைப்போலவே மெல்லிசையிலும் அவர்கள் பிரகாசித்தார்கள். "கங்கையாளே" பாடிய குலசீலநாதன், "நித்திரையில் தூங்கும் நித்திலமே வாராய்" பாடிய திலகநாயகம் போல், "உச்சி வெயில் காட்டினுள்ளே" பாடிய எஸ்.பத்மலிங்கம் ஆகியோரை எனது இலங்கை வானொலிக்காலத்தில் சந்தித்து நெருங்கிப்பழகும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது.

அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் பயின்று அங்கு சங்கீதபூஷணம் பட்டத்தை முதலாவதாகப்பெற்ற யாழ்ப்பாணத்தவர் என்று குறிப்பிடப்பெறும் திலகநாயகம்போல், நான் பயின்ற யாழ்மத்தியகல்லூரியிலே சங்கீத ஆசிரியராகப்பணியாற்றியவர். எனது கல்லூரிக்காலத்தின்பின் அங்கு நடைபெற்ற நிகழ்வுகளில் பலமுறை இவரைச் சந்தித்திருக்கிறேன்.

"தாய்வீடு" பத்திரிகையில் நான் எழுதிவரும் எனது கலைவாழ்க்கை அனுபவத்தொடரில் தற்செயலாக இம்முறை எழுதத்தீர்மானித்த "தேரோட்டி மகன்" நாடகத்தின் மூலம் இவர் எனக்கு மிகவும் இனியரானது தனிக்கதை. அந்த நாடகத்தில் நான் கிருஷ்ணனாக நடித்தபொழுது, என்னை அன்பினால் கட்டிப் போடும் சகாதேவன் பாடுவதாக 'வில்லிபாரதப்பாடல்' ஒன்று வரும். அதை திலகநாயகம் போல் அவர்களே பின்னணியில் பாடினார். "நீ பாரத அமரில் யாவரையும் நீறாக்கி" என்று அவர் பாடத்தொடங்கியதும் சபை ஸ்தம்பித்துப்போய் அமைதிகாக்கும். அக்காட்சியில் மேடையில் நிற்கும் நடிகர்களாகிய நானும் (கண்ணன்), ஹரிதாஸும் (சகாதேவன்) இனிமையான அந்தப்பாடல் கேட்டு மெய்சிலிர்த்துக் கொள்வோம். அந்தக்காட்சி முடிந்ததும் அரங்கில் எழும் கரகோஷத்தின் பெரும்பங்கு திலகநாயகம் போல் அவர்களுக்கே உரித்தானது. என்மேடை நாடகவரலாற்றில் ஒரு மறக்கமுடியாத அம்சமாக அந்தப்பாடல் அமைந்து போனது.

திலகநாயகம் போல் அவர்கள் சுரராகநயவிநோத சுரபி, இலங்கை அரசினரால் வழங்கப்பெற்ற கலாபூஷணம், கலைச்செம்மல் ஆகிய பட்டங்கள் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டவராவார்.
இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திலும், ரூபவாகினியிலும் முதற்தரக்கலைஞராக அங்கீகரிக்கப்பட்டு நிகழ்ச்சிகள் வழங்கிய இவர் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா தவிர பல ஐரோப்பியநாடுகளிலும் இசைக்கச்சேரிகள் வழங்கியிருக்கிறார்.

கல்வித் திணைக்களத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற திலகநாயகம் போல் அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி சங்கீத விரிவுரையாளராகவும், பரீட்சகராகவும் சேவையாற்றியுள்ளார்.

சென்ற 5ந்திகதியன்று (5-12-09) இவர் நம்மைவிட்டுப் பிரிந்த துயர் நிகழ்ந்தது. அந்த இனியகுரல் அமைதியில் அடங்கிப்போனது.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

இணையத்தளத்திலும்
'தாய்வீடு'
www.thaiveedu.com